**செய்தி வெளியீடு எண்: 084** **நாள்: 29.01.2020**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு சேவை வழங்கிடும் நோக்கோடு அப்பகுதிக்கான தனது கிளை அலுவலகத்தை தாம்பரத்திலிருந்து மறைமலைநகருக்கு இடமாற்றம் செய்துள்ளது. இதன் மூலம் இக்கழகத்தால் தொழில் முனைவோருக்கு வெகு அருகாமையிலேயே இயங்கி, தேவையான சேவைகளை துரிதமாக வழங்கிட இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

29.01.2020 அன்று மாண்புமிகு தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி. சம்பத் அவர்கள், தமிழக அரசின் முதன்மை செயலாளர் (தொழில்துறை) / Chairman, TIIC திரு. என். முருகானந்தம்., இ.ஆ.ப, முன்னிலையில், இக்கழகத்தின் மறைமலைநகர் கிளை அலுவலகத்தினை திறந்துவைத்து, கழகத்தின் திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றிய தகவல்களை எளிய முறையில் விளக்கும் கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் வாடிக்கையாளர்களுக்கு சுமார் ரூ.12.94 கோடிக்கான கடன் அனுமதி ஆணையினை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் வழங்கினார். மேலும் தற்பொழுது நடைபெறும் சிறப்பு கடன் வாரத்தையொட்டி ரூ.18.73 கோடிக்கான கடன் விண்ணப்பங்களை தொழில் முனைவோர் Chairman, TIIC அவர்களிடம் சமர்ப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக தற்போதைய சூழலுக்கு ஏற்ப கழகத்தின் திட்டங்கள், சேவைகள், மற்றும் அரசாங்கத்தின் மானியங்கள் ஆகியவற்றினை பற்றி தொழில்முனைவோருக்கு ஒரு எளிய இடைமுக அனுபவம் (interface experience) வழங்கும் நோக்கோடு மறுவடிவமைக்கப்பட்டுள்ள கழகத்தின் வலைத்தளத்தினையும் (website) மாண்புமிகு தமிழக தொழில்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள் துவங்கி வைத்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு கூடியிருந்த தொழில் முனைவோர்களோடு கலந்துரையாடினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**